Previous Date of examination : 03.11.2020

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No. 25 /2020 Date :08 .06.2023**

**PW 3 –** அழகர் , த/பெ. பக்கிரிசாமி

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் அ.சா.1 சுரேஷ்க்கு என்ன உறவு என்றால் உடன் பிறந்த தம்பி ஆவேன். நான் தற்போது எங்கு வசித்து என்ன செய்கிறேன் என்றால் கடுவங்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் நான் பார்த்துள்ளேன். 2 வது எதிரியை எங்கு பார்த்துள்ளேன் என்றால் 1 வது எதிரி சக்திவேல் வீட்டில் பார்த்துள்ளேன். நீதிமன்றத்தில் வேலை கிடைக்கும் என எனக்கு யார் தகவல் சொன்னார் என்றால் எனது அண்ணன் சுரேஷ் சொன்னார். அது சம்மந்தமாக நீதிமன்ற ஊழியர்களிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் ? இல்லை. 1 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரி நீதிமன்றத்தில் பணியாற்றாத நிலையில் எவ்வாறு நீதிமன்றத்தில் எனக்கு வேலை கிடைக்கும் என நம்பினேன் என்றால் எனது அண்ணன் சுரேஷ் எனக்கு நான் சென்னையில் வேலை செய்துகொண்டிருந்தபோது போன்செய்து திருவாரூர் துர்காலயாரோட்டில் உள்ள சக்திவேல் என்பவர் அவரது நண்பர் மூலம் நீதிமன்றத்தல் வேலை வாங்கி தருவதாக சொன்னதாகவும் அதற்கு உடனடியா பணம் கொடுத்தால் வேலை கிடைக்கும் என சொன்னதாகவும் கூறியதால் நான் சென்னையில் இருந்து நம்பி வந்தேன். சக்திவேலின் நண்பர் யார் என எனது அண்ணன் என்னிடம் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை.

(2) நான் பணம் கொடுத்தற்கு எதிரியிடம்மிருந்து எழுத்துபூர்வமாக ஆவணம் எதுவும் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். அதில் எதிரிகள் இருவரும் கையெழுத்த போட்டுள்ளார்கள். இந்த ஆவணம் 04.02.2019 ந்தேதி ஏற்பட்டதாகும். (**மேற்படி ஆவணம் ஆனது ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**) மேற்படி ஆவணத்தை யார் எழுதினார் என்றால் சக்திவேல் சொல்ல சொல்ல அ.சா.2 தாசன் எழுதினார். மேற்படி ஆவணம் எழுதும்போது எனது அண்ணன் சுரேஷ், நான், தாசன், தர்மராஜ், சாட்சி சக்திவேல், தினேஷ் ஆகியோரும் இருந்தோம். மேற்படி ஆவணத்தில் 28.02.2019 ந்தேதிகுள் நீதிமன்ற உதவியாளர் பணி வாங்கிதருவதாகவும் தவறும் பட்சத்தில் எதிரிகள் இருவரும் பணத்தை திருப்பி தருவதாகவும் எங்களிடம் உறுதி அளித்து ஆவணம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

(3) 28.02.2019 ந்தேதிக்கு பின்னர் நான் 1வது எதிரியிடம் போய் எதுவும் கேட்டேனா என்றால் சுமார் 1 மாதம் கழித்து நான் சென்னையிலிருந்து வந்து நானும், எனது அண்ணன் சுரேஷ் எனது தம்பிகள் தாசன், எனது நண்பர்கள் தர்மராஜ், சுரேஷ் ஆகியோரும் வந்து கேட்டோம். நீதிமன்றத்திற்கு புகார் கொடுக்கபோனபோது நான் இல்லை. எனது தம்பியும், எனது அண்ணனும் போனதாக சொன்னார்கள். 1வது எதிரி ஏமாற்றப்பட்டதாக நீதிமன்றத்தில் புகார்கொடுத்த விபரத்தை தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனது அண்ணன் சக்திவேலிடம் போய் பலமுறை பணம் கேட்டநிலையில் பணத்தை எல்லாம் 2 வது எதிரி மூலம் கோர்ட்டில் குடுத்துள்ளதாகவும், அதனால் தான்போய் கோர்ட்டில் புகார்கொடுக்கபோவதாகவும் எனது அண்ணனிடம் சக்திவேல் சொல்லியுள்ளார்.

(4) எனது அண்ணன் புகார்கொடுப்பதற்கு முன்பாகவே சக்திவேலும் புகார்கொடுத்திருந்தார் என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். போலிசாரிடம் புகார் கொடுத்தபோது நான் இல்லை. எனது அண்ணன் சுரேஷ் மற்றும் தம்பி தாசன் ஆகியோர் இருந்தார்கள். எதிரிகள் 2./. வட்டிதருவதாக கூறினார்கள் என நான் சொல்லி உள்ள நிலையில் எதிரிகளிடம் போய் வட்டியுடன் பணத்தை கேட்டேனா என்றால் ஒரு முறை போய் சக்திவேலிடம் நானும் எனது அண்ணனும் கேட்டோம். வழக்கு நடந்துவருவதாகவும், வழக்கு முடிந்தவுடன் தருவதாகவும் சொன்னார். பணம் யாரிடம் உள்ளது என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் பணத்தை கோவிந்தலட்சுமியிடம் கொடுத்துள்ளதாகவும் வேலை கிடைக்காவிட்டால் பணத்தை திருப்பி தந்துவிடுவதாக கோவிந்தலட்சுமி சொன்னதாகவும் சக்திவேல் சொன்னார்.

(5) நான் கொடுத்த பணத்திற்கு 2 வது எதிரிதான் பொறுப்பு என்றும் 1 வது எதிரி பொறுப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. இருவரும் பொறுப்பு. 1வது எதிரி வசம் பணம் இல்லை எனவும், அதனால்தான் 1வது எதிரியிடமிருந்து பணம் கைப்பற்றபடவில்லை என்றும், 2 வது எதிரியிம் பணம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் சொன்னால் அது எனக்கு தெரியாது. 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதால் 1 வது எதிரியை மையப்படுத்தி நாங்கள் புகார்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

(**அ.சா.3 தனது குறுக்கு விசாரணையின்போது 2 வது எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாக அதனால் 2 வது தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டும் என 2 வது எதிரி தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு 2 வது எதிரி தரப்பு கோரிக்கை பரிசீலணை செய்யப்பட்டு சாட்சியை 2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது**)

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது அண்ணன் 1 வது எதிரியிடம் போய் பணத்தை திரும்ப கேட்டபோது 1 வது எதிரி பணத்தை 2 வது எதிரியிடம் கொடுத்து வைத்திருப்பதாக 1 வது எதிரி சொன்னார் என 1 வது

எதிரி பொய்யாக கூறிய தகவலின் அடிப்படையில் 2 வது எதிரியை தொடர்புபடுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரியிடம் நான் கொடுத்தபணத்தை திரும்ப கேட்டுவருகிறேன் என்றால் சரிதான். 2 வது எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியம் அளித்தால் பணத்தை திரும்ப தருவதாக 1 வது எதிரி ஆசை வார்த்தை கூறியதன் அடிப்படையில் 2 வது எதிரியை வழக்கில் தொடர்புபடுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- எல். ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.